ued fc

ucati
Vello

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1069 /ஆ2/2023 . நாள் : 06.03.2023.

பொருள்: வேலூர் மாவட்டம் – இலவச பேருந்து பயண அட்டை2022–2023–ஆம் ஆண்டிற்கான அரசு / அரசு உதவி பெறும் / தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு 100 % கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்குதல் – பள்ளி அளவில் ஒரு Nodal Officer–ஐ நியமனம் செய்தல் (ம) அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர்(தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3785/இ/இ2/2023, நாள்.23.02.2023.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவி பெறும் / தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை 2022–2023–ஆம் ஆண்டிற்கானது 100 % கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்குதல் சார்ந்து பள்ளி அளவில் ஒரு Nodal Officer–ஐ நியமனம் செய்ய சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வேலூர் மண்டலத்தில் உள்ள மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு விரைவாக பேருந்து பயண அட்டை பெறுவதற்கு வழிவகை செய்யவும், ஒவ்வொரு பள்ளிகளிலிருந்தும் ஒரு Nodal Officer–ஐ நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுரை வழங்கப்படுகிறது.

மேற்கூறியபடி அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுரை வழங்குமாறும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டு விரைந்து முடித்திடுமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்,
2. அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   அரசு /அரசு உதவி பெறும்/ தனியார் பள்ளிகள், வே.மா.

நகல்

சென்னை–6, த.நா.ப.க.ஆணையரக இ.இ.(தொ.க.) அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//